முருகப்பெருமான் துணை

**மகான் தன்வந்திரி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

09.07.2023, ஞாயிற்றுக்கிழமை

1. தருமராஜனே அரங்கா போற்றி
   தயவெனும் சக்திதனை கொண்டு
   கருமவினைதனை அகற்றுகின்ற
   கலியுக ஞானியே தேசிகா போற்றி
2. போற்றியே சோபகிருது மிதுன திங்கள்
   புகலுவேன் அறுநான்குதிகதி கதிர்வாரம்
   (சோபகிருது வருடம் ஆனி மாதம் 24ம் நாள், 09.07.2023, ஞாயிற்றுக்கிழமை)
   ஆற்றல்பட அறிவுரை ஆசிதனை
   அகிலம் நலமுற தன்வந்திரி யானும்
3. யானும் அரங்கன்கேட்க உரைப்பேன்
   உண்மை நெறிகாட்டும் ஞானி
   ஞானம் உலகமக்கள் பயில
   நம்பகமுற கலியுக மக்களுக்கு
4. மக்களுக்கு ஞானசித்தி கிட்டி
   மறுமை வெல்லும் மகத்துவம்
   ஊக்கமுடன் கண்டடைய நேரும்
   உயிர்கொலை நீக்கி சைவநெறி
5. நெறிமுறை ஏற்ற மக்களுக்கு
   நெஞ்சமதில் தயவுப் பெருகி
   அறிவுத் தெளிவு திடம்கூடி
   அழியாமை பெற உண்டான
6. ஆனதொரு மேல்நிலை காணும்
   ஆகாத தீவினையை நீக்குவதுடன்
   தானாக மற்றவர்க்கும் பற்றா
   தடுத்து மீட்கும் பலமும் கூடி

7. கூடியே கலித்துன்பங்கள் தனை
குவலயத்தை விட்டு விரட்டி
நாடெங்கிலும் ஞானவான்களாக
ஞானிகளை வணங்கும் மக்களாக
8. ஆகவே எங்கும் மாற்றமதும்
ஆற்றலாகப் பெருகி இனிதே
யுகமதும் ஞானயுகம் ஆகும்
உயர்த் தலைமை கொண்டுவரும்
9. வருகின்ற ஞான சமூகமாக
வரலாறு படைக்கும் ஞானியாக
ஆறுமுகனார் அரங்கமகானுள்
ஆற்றல்பட இருந்து வழிநடத்த
10. வழிநடத்த வையகம் மாறும்
வளமும் ஞானபலமும் கூடி
அழிவில்லா புண்ணிய பூமியாக
அரங்கமகான் ஆசிபெற்ற நல்மக்கள்
11. நல்மக்கள் ஆளும் காலமாக
ஞானசித்தர் காலமுமாக மாறி
வல்லமைபட ஞான ஆட்சி மலர்ந்து
வையகம் தானும் பாதுகாப்பு பெறும்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–